கொச்சி பினாலே நிறுவனம், மாணவர்களின் பினாலேயின் (Students' Biennale) நான்காவது அத்தியாயத்தை அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறது.

கொச்சி பினாலே நிறுவனத்தின் மிகப்பெரிய கல்வித்திட்டமான மாணவர்களின் பினாலே, இந்தியாவின் நுண்கலையியல் கல்விமுறைகளைச் சார்ந்தும் அதை வலுப்படுத்தவும் முனைகிறது. கொரோனா தொற்றின் காரணமாக முன்கண்டிராத சவால்களை சந்தித்து வருவதால், மாணவர்களின் பினாலே இக்கல்வி வாய்ப்பினை, குறிப்பாக இக்காலக்கட்டத்தில், மாணவர்களுக்கும் கல்வி நிலையங்களுக்கும் கொண்டுசேர்க்க உறுதியாக உள்ளது. அதனை, இணையவழி கண்காட்சி முறையில் (online exhibition format) மாற்றியமைக்கப்பட்டு நடைபெற உள்ளது. பயிலரங்கங்கள் கலந்துரையாடல்கள் வலைத்தளம் மூலமாக நடத்தப்படும்.

2020- ஆம் ஆண்டின் அத்தியாயத்தை ஒருங்கிணைக்கும் ஐந்து நெறிகூராளர்கள் (curators) - அதிப் தத்தா, அர்ச்சனா ஹண்டே, மனோஜ் வைலூர், சுரேஷ் K நாயர் மற்றும் வசுதா தோழூர். இவர்கள், கலைத்துறையில் கலைஞர்களாகவும் கலை வல்லுனர்களாகவும் அனுபவம் உள்ளவர்கள்.

**செயல்முறை**

கோவிட்- 19 நோய் தொற்றின் காரணமாக மாணவர்களின் பினாலேயின் இந்த அத்தியாயம் வலைத்தளம் மூலமாகவே நடைபெறும்.

இந்தச் செயல்முறையில், கண்காட்சி மன்றமும் (exhibition forum), பல பயிலரங்கங்களும் (workshop programmes) அடங்கும். தேர்ந்தெடுக்கப்படும் முறை, கண்காட்சி நெறிகூராளர்களால் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருக்கும் மாணவர்களுக்கு பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் அமையும். தேர்ந்தெடுக்கப்பட்ட திட்டப்பணிகளுக்கு ஊக்கமாக உற்பத்தி மானியம் (production grant) வழங்கப்படும்.

கண்காட்சிக்கு உருவாக்கப்படும் கலைப்படைப்புகள், டிஜிட்டல் கலைப்படைப்புகள் மட்டுமல்லாமல் எல்லா வகை கலைப்படைப்புகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

நெறிகூராளர்களுடன் தொடர்புகொள்வது முதல் கண்காட்சி அமைப்பது வரையிலான அனைத்து அம்சங்களும் வலைத்தளத்திலேயே நடைபெறும். மாணவர்கள் எளிதில் பயன்படுத்தக்கூடிய வலைத்தளப் பக்கங்கள் (video conferencing and other online tools) உபயோகிக்கப்படும். இப்பக்கங்களை உபயோகிக்கவும், கலைப்படைப்புகளை வலைத்தளத்தில் பதிவேற்ற ஏற்றவாறு படம்பிடிக்கவும் (documentation) ஆலோசனைகளும், தேவையான உதவிகளும் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

கண்காட்சியைத்தவிர பல்வேறு பயிலரங்கங்கள், பங்கேற்கும் மாணவர்களுக்கும் மற்ற மாணவர்களுக்கும் ஒருசேர நடைபெறும். இந்த பயிலரங்கங்களை கண்காட்சி
நெறிகூராளர்கள், பிற கௌரவ விரிவுரையாளர்களுடன் சேர்ந்து நடத்துவர்.

**முக்கியமான தேதிகள்**

மாணவர்களின் பினாலே, பிப்ரவரி 21, 2021 அன்று வலைத்தளத்தில் தொடங்கிவைக்கப்படும்.
விண்ணப்பிக்க கடைசி நாள் நவம்பர் 15, 2020. தேர்தெடுக்கப்பட்ட மாணவர்களின் பெயர்கள் டிசம்பர் 1, 2020 அன்று அறிவிக்கப்படும்.

**தகுதி வரம்புகள்**

இந்தியாவில் இருக்கும் ஏதேனும் கல்வி நிறுவனத்தில் BFA அல்லது MFA (அல்லது நிகரான பட்டப்படிப்பு) படித்துக்கொண்டிருக்கும் எந்த மாணவரும் விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பங்கள்**

விண்ணப்பிக்க, இங்கே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை தொடரவும் :
http://kochimuzirisbiennale.org/sbapplications.
விண்ணப்பத்தை பூர்த்தி செய்ய உதவி வேண்டுமாயின், இங்கே கொடுக்கப்பட்டுள்ள இணைப்பை தொடரவும் : http://kochimuzirisbiennale.org/sbhelp.

மாணவர்களின் பினாலே தொடர்பான கேள்விகளை இந்த மின்னஞ்சலுக்கு அனுப்பலாம் :
studentsbiennale@kochimuzirisbiennale.org.
விண்ணப்பங்களுக்கான காலக்கெடு நவம்பர் 15 ஆம் தேதி மாலை 5 மணி ஆகும்.